10-12-2019

# Press Release

## Sub: Tempo Traveler facility from Alandur Metro to Velachery from today 10-12-2019

CMRL has introduced several last mile connectivity measures like Share Auto, Share Taxi services, Small Bus by MTC services, Metro cab feeder services, E-bike services for the benefit of the Metro passengers.

In addition to the above, In order to cater to Chennai public better, Tempo Travellers have been arranged for connecting from Alandur Metro Station via St. Thomas Mount Metro, Thillai Ganga Nagar subway to Velachery from today (10.12.2019) at a flat rate of RS.20/-. The tempo traveler is available every 30 minutes.

CMRL has previously provided Feeder Service facility from Alandur Metro Station to DLF cyber city IT Park and Air Conditioned tempo traveller feeder services will be provided to Tidal park (Taramani), Ramanujam IT park from Little Mount Station at a flat rate of Rs. 20/- for the benefit of Metro Passengers in the IT corridor.

# பத்திரிக்கை செய்தி

## ஆலந்தூர் மெட்ரோ முதல் வேளச்சேரி வரை டெம்போ டிராவலர் இணைப்பு சேவை இன்று முதல் (10.12.2019) பயன்பாட்டிற்கு வருகிறது

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் மக்கள் பயன்பாட்டிற்கு பல போக்குவரத்து இணைப்பு சேவைகளான ஷேர் ஆட்டோ, ஷேர் டாக்சி, சென்னை மாநகர போக்குவரத்து கழகத்தின் சிறிய பேருந்து சேவை, மெட்ரோ சீருந்து இணைப்பு சேவை மற்றும் இ-பைக் ஆகியவற்றை சென்னை வாழ் மக்களுக்கு வழங்கி பயணிகள் தங்களது சேருமிடத்தை எளிதாகவும் விரைவாகவும் சென்று சேர்ந்திட பல்வேறு முன்முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது.

மேற்கண்ட வசதிகளுடன் கூடுதலாக, ஆலந்தூர் மெட்ரோ இரயில் நிலையம் முதல் பரங்கிமலை மெட்ரோ இரயில் நிலையம், தில்லை கங்கா நகர் சுரங்கபாதை வழியாக வேளச்சேரியை இணைக்கும் குளிர்சாதன டெம்போ டிராவலர் இணைப்பு சேவை ரூ.20 கட்டணத்தில் இன்று முதல் (10.12.2019) பயன்பாட்டிற்கு வந்துள்ளது. இச்சேவை 30 நிமிட இடைவெளியில் இயக்கப்படும்.

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், ஏற்கனவே ஆலந்தூர் மெட்ரோ இரயில் நிலையத்திலிருந்து டி.எல்.எப் மென்பொருள் நிறுவனத்திற்கும், சின்னமலை மெட்ரோ இரயில் நிலையத்திலிருந்து டைடல் பார்க் (தரமணி) மற்றும் ராமானுஜம் தொழில்நுட்ப பூங்காவிற்கும் குளிர்சாதன வசதியுடன் கூடிய டெம்போ டிராவலர் இணைப்பு சேவைகளை வழங்கி வருகிறது.